39

# THE JUBILATION

OF THE

# COMING OF CHRIST.

FIRST EDITION—5,000 Copies.

## கிறிஸ்து வருகையின் ஆரவாரம்.

MADRAS:

PRINTED FOR THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

By H. W. Laurie, Christian Knowledge Society's Press,

No. 18, Church Street, Vepery.

1870.

**No. 118.** *Two Pie.* ௨ பை.

சென்னப்பட்டணத்துச் சன்மார்க்கப்

# பத்திரப் பிரிதிகள்.

---

கிறிஸ்துவின் மரணம்.

பாபநாசம்.

தருணம் தப்பினால் மரணம்.

சந்தோஷமுள்ள செய்திகள்.

நன்றாய் முடிவது எல்லாம் நன்றே.

எல்லாம் ஒன்றல்ல.

நிராச்சந்தேக நிவிர்த்தி.

சத்திரம்.

விளக்கு வீடு.

இருவழி நாட்டம்.

பாவமன்னிப்புக்காக வேண்டல்.

இயேசுகிறிஸ்துவின் திவ்வியகுணம் பாரும்.

இவைகள் இலவசமாய்க் கொடுக்கப்படும்.

# THE JUBILATION OF THE COMING OF CHRIST.

# கிறிஸ்து வருகையின் ஆரவாரம்.

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனிடும் சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். க. தெச. ச. யிசு. அல்லாமலும் கர்த்தராகிய இயேசு தமது வல்லமையுள்ள தூதரோடும் சுவாலையாய் எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவார். உ. தெச. க. சு. அதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைக்குறித்துத் துக்கத்தோடே புலம்புவார்கள், மெய்யாய் அப்படியிருக்கும். ஆமென். வெளி. க. எ.

இந்த உலகத்தில் பலபல ஆரவாரங்கள் நடக்கிறதுண்டு. பட்சிகள், மிருகங்கள், மனிதர்கள்

ஆரவாரம் பண்ணுகிறதுண்டே; பட்சிகள் ஒன்றோடொன்று போர்செய்யும்போது கூவியும், ரோமங்களைச் சிலுப்பியும் ஆரவாரம்பண்ணும். மிருகங்களும் முக்காரம்போட்டும், கெர்ச்சித்தும், ரோமங்களைச் சிலுப்பியும் தன் சத்துருக்களோடு யுத்தஞ்செய்ய ஆரவாரம்பண்ணும். மனிதர்களிலும் யுத்தம்பண்ணுகிற இருகட்சிக்காரரும் கொம்புகள், தடிகள், பலவகை ஆயுதங்கள் வீசியும், வட்டமாறியும், தம்புரு முதலான வாத்தியங்கள் முழக்கியும், பெருஞ் சத்தமிட்டும் ஆரவாரம்பண்ணுவார்கள். வேதத்தில் சொல்லியிருக்கிற அநேக யுத்தசங்கதிகளைப் பார்க்கும்போது அவர்கள் ஆரவாரங்களைப் பார்க்கலாம். பூமி அதிரத்தக்கதாக ஆரவாரம்பண்ணினதாகச் சொல்லியிருக்கிறது. மேகங்கள், மின்னல்கள், இடிமுழக்கங்களும் ஆரவாரம்பண்ணும்; இராசராசாக்கள் பீரங்கிவெடி முதலானவைகளோடு எதிர்த்து யுத்தங்கள் நடப்பித்து ஆரவாரம் பண்ணுவார்கள்.

ஆனால் இந்த உலகத்தில் இதற்குமுன் நடந்ததும், இனிமேல் நடப்பதுமான எந்த ஆரவாரமும் தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் ஆரவாரத்துக்கு ஒப்பிடக்கூடாது. பிரமாண்ட

மான கருமலேயோடு கடுகை ஒப்பிடலாமா? சூரியவெளிச்சத்துக்குத் தீபவெளிச்சத்தை ஒப்பிடலாமா? கூடாதே. இயேசுகிறிஸ்து தமது சத்துருவாகிய பசாசையும், அவனைச் சேர்ந்துகொண்டு அவரை அசட்டைபண்ணின பாவிகளேயும், அவருடைய பரிசுத்த திருச்சபையைத் துன்பப்படுத்தி அழித்து இரத்தஞ்சிந்தின பாவிகளேயும், அவருடைய திருவசனத்தை அவர் ஊழியக்காரர் போதித்தும், அதை அங்கிகரித்து விசுவாசியாத எல்லாரோடும் அவர் யுத்தம்பண்ணி அவர்களே நியாயந்தீர்க்க வருவார். அவர் வரும்பொழுது வல்லமையுள்ள தூதர்கள் சேனேயோடும், அவர்கள் எக்காள தொனிகளோடும், சுவாலேயாய் எரிகிற மகா அக்கினிமேக சிம்மாசனத்தில் வருவார். இவ்வுலக ஆரவாரங்கள் அந்தந்த இடத்திலே மாத்திரம் நடக்கும்; இவ்வுலக ராசாக்கள் யுத்தம்பண்ணும்போது உண்டாகிற பீரங்கிமுதலான சத்தங்கள் உலகமெங்குங் கேட்கிறதில்லே. திருஷ்டாந்தமாக: ஐரோப்பாக்கண்டத்தில் நடக்கிற யுத்த ஆரவார முழக்கங்கள் ஆசியாக்கண்டத்துக்குக் கேளாது. அப்படியே, ஆசியாக்கண்டத்தின் வடகட்சியிலுண்டாகிற

ஆரவார பீரங்கி முதலான முழக்கங்கள் ஆசி யாக்கண்டத்தின் தென்கட்சிக்குக் கேளாது. கல்குத்தாப்பட்டணத்தில் ஆயிரமாயிரம் பீரங் கிகளைச் சுட்டாலும், திருநெல்வேலிக்குக் கே ளாது. அப்படிப்போல ஐரோப்பா முதலான இடங்களில் நடக்கிற இடிமுழக்க மின்னல்கள் திருநெல்வேலி முதலான தென்திசைக்குக் கே ளாது.

ஆனால் இயேசுகிறிஸ்துவின் ஆரவாரமோ ஐ ரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா மு தலான கண்டங்களெங்கும், அவைகளிலுள்ள சகல தேசங்களிலும், சகல தீவுகளிலும், சகல பட்டணங்களிலும், சகல ஊர்களிலும், சகல வீடுகளிலும், சகல மனிதர்களிடத்திலும், சகல மிருகங்கள் பட்சிகளிடத்திலும், பூமியிலும், சமுத்திரத்திலும், ஆழங்களிலும், மேடுகளி லும், பூமியைச் சுற்றியிருக்கிற ஆகாயமண்ட லங்களிலும், வானங்களிலும், அதின் உன்ன தங்களிலும் தொனிக்கும். உலகம் உண்டான நாள்முதல் பூமியிலுள்ள மிருகங்கள் பட்சி கள் மனிதர்கள் இடும் சத்தங்களும், பீரங்கிகள் வெடிகள் இடிமுழக்கங்கள் இவைகளையெல் லாம் ஒன்றாய்ச் சேர்த்து ஒரே முழக்கமாக்கி

னாலும், இவ்வுலகம் உண்டானநாள்முதல் உண்டான சகல அக்கினிச்சுவாலைகளும் ஒன்றாய்க் கூடினாலும், அவர் வருகையில் உண்டாகும் எக்காள முழக்கங்களுக்கும் அக்கினிச்சுவாலைக்கும் ஒப்பாகமாட்டாது.

மேலும் இந்தப் பூமியின் விசாலத்திலும் ஆகாயவிரிவிலும் அதின் விசாலமும் எல்லையும் சொல்லக்கூடியதல்ல. பூமியின் மனிதர்களைப்பார்க்கிலும், ஆகாயமண்டலத்திலும், பரமண்டலத்திலுமுள்ள தூதர்களின் சேனைகள் அதிகமென்று சொல்லத்தக்கது. அவர்களில் அநேகர் மகா வல்லமையுடையவர்கள்; அந்தத் தூதர்களாகிய சகல கூட்டமும் இயேசுகிறிஸ்துவோடு புறப்படுவார்கள். அவர்கள் புறப்படவும் எத்தனப்படவும் பிரதானதூதன் இயேசுவானவரால் கட்டளைபெற்றுச் சத்தமிடுவான். எப்படியென்றால், மகா தேவனாகிய இயேசுகிறிஸ்து பசாசானவனையும், உலகத்தில் அவரை விசுவாசியாத அவிசுவாசிகளான பாவிகளையும் நியாயந்தீர்த்து ஆக்கினைசெய்ய புறப்படுகிறதினாலே, தூதர் சேனைகளெல்லாரும் புறப்படுங்கள், எக்காளங்களை ஊதுங்கள், ஆர்ப்பரியுங்கள், ஆரவாரம்பண்ணுங்கள் என்

பான். இப்படி பிரதான தூதனிடும் சத்தமும், தேவ எக்காளமும் முழங்கும். சகல பரிசுத்த தூதர்களும் திரள் திரளாய் அணி அணியாய்ப் புறப்பட்டு, இயேசுகிறிஸ்துவின் நியாயாசனத்தைச் சூழ்ந்துவருவார்கள். வானசேனைகளாகிய சூரிய சந்திர நட்சத்திரங்கள் முதலிய பிரகாசத்திலும் அதிகப் பிரகாசமுமிருக்கும். அப்போதுண்டாகும் பிரதான தூதனிடும் சத்தமும், தேவதூதர்களின் எக்காளதொனியும், மகா ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையும் மகிமையும் சொல்லமுடியாததாயிருக்கும்.

இப்படி அவர் வல்லமையோடும், மகிமையோடும், எக்காளதொனியோடும், பிரகாசத்தோடும், அக்கினிச்சுவாலையோடும், தூதர்களின் கூட்டத்தோடும் ஆகாயமண்டலத்திலே ஆரவாரமாய் வரும்போது, உலகத்தின் முதல் மனிதனாகிய ஆதாம்முதல், உலகத்தின் கடைசிவரையுமுள்ள சகல மனிதர்களும் அவரைக் காண்பார்கள்.

முன் அவர் மனுஷ அவதாரம்பண்ணி, இந்தப் பூமியிலிருந்த முப்பத்துமூன்று வருஷக் காலங்களிலுள்ள மனிதர்களில் ஒரு பங்குமாத்

திரம் அவரைக் கண்டார்கள். அப்போது அவர் தாழ்மையாய்ப் பிறந்து, தாழ்மையாய் வளர்ந்து, தாழ்மையாய் நடந்து, தாழ்மையாய்ப் போதித்து, பலத்த அதிசயங்களையும் அற்புதங்களையும் நடப்பித்து, தாழ்மையாய்ப் பாடுபட்டு, தாழ்மையாய்ச் சிலுவைசுமந்து, தாழ்மையாய் இரத்தஞ்சிந்தி, தாழ்மையாய்ச் சீவனைவிட்டு, அடக்கம்பண்ணப்பட்டு, மகிமையாய் உயிர்த்தெழுந்து பரமண்டலத்தின் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறூர்.

அக்காலத்தில் அவர் குழந்தைப்பிராயத்தைக் கண்டவர்களும், அவரைப் பெற்ற கன்னிமரியாளும், அவரால் உயிர்த்தெழுந்தவர்களும், அவரால் சுகமாக்கப்பட்ட குஷ்டரோகிகளும், அவரால் அற்புத நன்மைகளைப் பெற்றவர்களும், அவர் வருகைக்குக் காத்திருந்த பரிசுத்தவான்களும், அவருடைய அப்போஸ்தலர் முதலான சீஷர்களும் அவரைக் கண்டதுமல்லாமல் அவரை விரோதித்த பாவிகளும், அவரை அடித்த துரோகிகளும், அவரைச் சிலுவையில் அறையச்சொன்ன பொந்திப்பிலாத்து முதலானவர்களும், அவரைச் சிலுவையில் அறைந்தவர்களும், அவரைச் சிலுவையில் அறை

யக் கூப்பிட்ட ஆசாரியர் முதலான கூட்டங்
களும், அவரைக் காட்டிக்கொடுத்தவனும், அக்
காலத்திலிருந்த அநேக கிராமங்களின் சனங்
களும் அவரைக் கண்டார்கள். ஏறக்குறைய
கானான்தேசத்தாரும், அதைச் சூழ்ந்த சில
ரும் அவரைக் கண்டார்கள். ஆனால் இனிமேல்
அவர் ஆரவாரமாய் வரும்போது வேதவாக்கி
யம் சொல்லுகிறபடி, கண்கள் யாவும் அவரைக்
காணும். ஆதி மனிதனாகிய ஆதாமும், அவர்
வருகைக்குக் காத்திருந்த ஆபிரகாமும், மோசே
முதலான தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்
முதலான பரிசுத்தவான்களும், சகல கண்காணி
மார்கள், குருமார்கள், உபதேசிமார்கள், உபா
த்திமார்கள், திருச்சபையின் ஸ்திரீ புருஷர்,
பிள்ளைகள், இரத்தசாட்சியாய் மரித்தவர்கள் மு
தலான நித்தியசீவ பங்காளிகளெல்லாரும் அவ
ரைக் காண்பார்கள். அவர்கள்மாத்திரமல்ல,
ஆதிமுதலாய் அவருடைய திருச்சபையைத்
துன்பப்படுத்தின எல்லா ராசாக்களும், எல்லாப்
பிரபுக்களும், எல்லா அதிபதிகளும், அவரை
ஏற்றுக்கொள்ளாத சகல விக்கிரக ஆராதனைக்கா
ரரும், மகமதுமார்க்கத்தாரும், மற்ற பொய்மதங்
களைப் பற்றியிருக்கிற பாவிகளும், மரித்து மண்

ணாய்ப் போனவர்களும், சீவனோடிருக்கிற யாவரும், அவனைக் குத்தினவர்களும் அவனைக் காண்பார்கள். செத்துப்போனவர்கள் எப்படி அவனைக் காண்பார்களென்று அவிசுவாசிகள் சொல்லுவார்கள். மரித்தவர்கள் எப்படி எழும்புவார்களென்று கேட்டால், ஆ புத்தியீனனே! நீ விதைக்கிற தானியங் கெடாவிட்டால் புதிதான பயிர் தோன்றமாட்டாதே என்று வேதம் சொல்லுகிறது. நீ சோளவிதை அல்லது கம்பு விதை முதலான விதையை விதைக்கிறாய், அதின்மேல் மழை பெய்கிறது, நீ விதைத்த மூன்றும் நாளில் அதைக் கிளறிப்பார்க்கும்போது உமிவேறு, மாவேறாக அழுகிச் செத்துப்போயிருக்கக் காண்பாய். நீ விதைத்த விதை சாகாவிட்டால் புதிய பயிரைக் காணமாட்டாய். மேலும் நீ விதையைமாத்திரம் விதைக்கிறாய், அதில் தட்டையும் தாளும் எப்படி வருகிறது? நீ ஒரு மணி விதைக்க, அதில் பல கதிர்களும், அநேக மணிகளும் எப்படி வருகிறது? நீ சோளக்கதிரை உதிர்த்து, அதின் மணியை எண்ணிப்பார்; ஒரு கேப்பைக்கதிரை உதிர்த்து, அதின் மணியை எண்ணிப்பார்; நீ ஒரு மணி விதைக்க அதில் அநேகம் மணி எப்படி வந்தது? அப்படியே

சகல விதைவித்துகளும் செத்துப்பிழைக்கிறது. அப்படிப்போலவே, ஆலமரத்தின் சிறு விதையைப் பார், அது பூமிக்குள் விழுந்து செத்து, புதிய மாமுண்டாகி, எத்தனைவண்டிப் பாரமாகிறது? அந்த மரங்கள் எப்படி வந்தது? தேவனுடைய வல்லமையினுல் அல்லவா? அவருடைய வல்லமையைப்பற்றி இன்னும் சில காரியங்களைச் சொல்லுகிறேன், கேள். இதோ பார், நான் ஒரு துரும்பை எடுத்து ஆகாயத்தில் எறிகிறேன்; இது இப்போது ஆகாயத்தில் நிற்கிறதா? இல்லையே. ஒரு துரும்பை ஆகாயத்தில் நிற்கப்பண்ண நம்மாலே கூடாத காரியந்தான், தேவனுக்கு இது வருத்தமா? இல்லையே. நீ எத்தனை குடம் தண்ணீர் சுமப்பாய்? இரண்டுகுடம் சுமப்பாயா? ஒருவேளை இரண்டுகுடம் தண்ணீரை ஒரு குடத்தின்மேல் மற்றொரு குடத்தையும் வைத்துச் சுமப்பாய். கூட இரண்டு குடம் தண்ணீரை உன்மேல் வைத்தால் சுமப்பாயா? மாட்டாயே. ஒரு குடம் தண்ணீர் இரண்டு துலாம் இருக்கலாமே. இந்த ஊரிலுள்ள மனிதர்களுக்கும், மிருகங்கள் முதலானவைகளின் செலவுக்கும் நாளொன்றுக்கு எத்தனை குடம் தண்ணீர் செல்லும்? அது எத்த

ளைவண்டிப் பாரமிருக்கும்? இந்த நாட்டுக்கு
எத்தனை குடம் தண்ணீர் செல்லும்? இந்தத் தே
சத்துக்கு எத்தனை குடம் தண்ணீர் செல்லும்?
இந்த உலகமுழுவதுக்கும் எத்தனை குடம் தண்
ணீர் செல்லும்? இந்தப் பூமண்டலமெல்லாம்
நனைய எவ்வளவு தண்ணீர் செல்லும்? இவ்வ
ளவு தண்ணீரையும் நிறுத்துப்பார்த்தால் எவ்வ
ளவு பாரமாகும்? ஆறுகளெத்தனை, குளங்க
ளெத்தனை, கிணறுகளெத்தனை? இந்தத் தண்ணீர்
களின் பாரம் எவ்வளவு? இவ்வளவு ஏராளமா
ன தண்ணீர்களை அந்தரத்திலே நிறுத்தித் தொங்
கச்செய்து, எந்த இடத்துக்குப் போகவேணு
மோ அங்கே மேகத்தில் போகச்செய்து, அது
பருந்துண்டங்களாய்ப் பூமியில் விழுந்தால்,
மனிதர்கள் மிருகங்கள் பயிர்களெல்லாம் சேத
மாய்ப் போகுமென்று மகா கிருபையோடும்
வல்லமையோடும் துளிதுளியாய்ப் பிரித்து,
சாமாரியாய்ப் பெய்யப்பண்ணுகிறதும் தவிர,
இந்தப் பூமியிலும் சாஸ்திரிகள் சொல்லுகிறபடி
௱௰உ பங்கு பெரிதாயிருக்கிற சூரியனையும்,
பிரமாண்டமான வஸ்துக்களாகிய சந்திரன் நட்
சத்திரங்கள் முதலான கிரகங்களையும், உடுது
மயில் சுற்றளவும், எண்ணுயிரம் மயில் குறுக்க

ளவுமுள்ள இந்தப் பூமியை அந்தரத்திலே தொ
ங்கி நடக்கும்படி செய்கிற செயலைப்பார். நீ
ஒரு வீடு கட்டினால் அதற்குச் சுவர்வைத்துக்
கால் நிறுத்திக் கூரையை அதின்மேல் வைக்கி
றாய். ஆனால் பூமிக்காவது, சூரியனுக்காவது,
நட்சத்திரங்களுக்காவது, மேகங்களுக்காவது
தூண்களுண்டா? கட்டித் தூக்கியிருக்கிறதா?
நன்றாய் யோசித்துப்பார். இவைகளை அந்த
ரத்திலே நிறுத்தி நடத்துகிறவர் செத்தவர்களை
ஏன் எழுப்பக்கூடாது? அவர் சர்வ வல்லமை
யுள்ளவரானதினாலே எல்லாவற்றையும் செய்
யக்கூடும். ஆகையால் உலகமுண்டான நாள்
முதல் உலக முடிவுவரையும் செத்து அடக்கப்
பட்டவர்களும், சுட்டெரிக்கப்பட்டவர்களும்,
மலையின் மிருகங்கள் தின்றவர்களும், சமுத்தி
ரத்தின் மச்சங்கள் தின்றவர்களும், மண்ணோடு
சேகித்துப் புழுதியாய்ப் போனவர்களும், சகல
ராசாக்களும், சகல பிரபுக்களும், சகல கல்வி
மான்களும், சகல மூடரும், சகல பராக்கிரம
சாலிகளும், சகல பெலவீனரும், சகல விருத்
தாப்பியரும், சகல வாலிபரும், சகல பிள்ளைக
ளும், மரித்தவர்களும் உயிரோடிருக்கிறவர்க
ளுமாகிய மனுக்கள் யாவரும் அவரைக் காண்

பார்கள். இதைக்குறித்து ஆச்சரியப்படாதி ருங்கள்; என்னத்தினாலெனில், பிரேதக்குழியி லுள்ள யாவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் சீவனை அடையவும், தீமைசெய் தவர்கள் ஆக்கினையை அடையவும் எழுந்து புறப்படுவார்களென்று வேதம் சொல்லுகிறது. எக்காளம் தொனிக்கும், அப்போது மரித்த வர்கள் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார் களென்று வேதம் சொல்லுகிறது. இப்படி அவ ருடைய வல்லமையினாலே எழுப்பப்பட்ட தின்பின் திரள்திரளாயிருக்கிற மனிதக்கூட்டங் களைத் தேவதூதர்கள் நீதிமான்களிலிருந்து துன் மார்க்கரைப் பிரிப்பார்கள். தகப்பனிலிருந்து மகனையும், தாயிலிருந்து மகளையும், புருஷனிலி ருந்து பெண்சாதியையும், பெண்சாதியிலிருந்து புருஷனையும் பிரித்து, அவருடைய வலதுபாரி சத்தில் அவரை விசுவாசித்த நீதிமான்களையும், அவர் இடதுபக்கத்தில் அவரை விசுவாசியாத அவிசுவாசிகளாகிய அநீதிமான்களையும் நிறுத் துவார்கள். மேய்ப்பனானவன் ஆடுகளையும் கடாக்களையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோ லப் பிரிக்கப்படுவார்களென்று வேதம் சொல்

லுகிறது. அப்பொழுது வலதுபக்கத்தில் நிற்கிற நீதிமான்களை இயேசுவானவர் பார்த்து: என்னை விசுவாசித்த பரிசுத்தவான்களே! என்னை மகிமைப்படுத்தின சன்மார்க்கரே! என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்ட எனது பிரியமான பிள்ளைகளே! உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக எத்தனம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய ராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ள வாருங்களென்று மகா அன்போடும் பிரியத்தோடும் ஆவலோடும் சொல்லுவார். அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு அவரால் பெற்றுக்கொண்ட சகல ஆசீர்வாதங்களுக்காகவும் அவருக்குத் தோத்திரஞ்செலுத்தி, சதாகோடி காலம் குன்றாததுமாய், குறைவில்லாததுமாய், சந்தோஷமுள்ளதுமாய், சொல்லிமுடியாததுமாய், மரணமில்லாததுமாய், துன்பமில்லாததுமாய், பசாசுக்களில்லாததுமாய், பாவமில்லாததுமாய், அன்பு நிறைந்ததுமாய், எண்ணிக்கைக்குள் அடங்காத பரிசுத்தவான்கள் கூட்டம் நிறைந்ததுமாய், தேவனுடைய சந்நிதானம் இருக்கிறதுமாய், கீர்த்தனைகளும் கீதவாத்தியங்களும் உள்ளதுமாய், பசிதாகம் உஷ்ணமில்லாததுமாய், சகல நன்மையும் நிறைந்ததுமாயிருக்

கிற நித்திய சந்தோஷத்துக்குள் பிரவேசிப்பார்கள்.

இடதுபக்கத்தில் நிறங்கெட்டு, அழகு குன்றிப் பசாசின் சாயலுள்ளவர்களாய் நிற்கிற அவிசுவாசிகளை இயேசு தேவன் பார்த்துக் கோபத்தோடே சொல்லுவார்: பாவிகளே! என்னை நம்பாதவர்களே! என்னை அசட்டை செய்தவர்களே! என் சிஷரைத் துன்பப்படுத்திக் கொலைசெய்தவர்களே! சபிக்கப்பட்டவர்களே! உங்களுக்காகவும், உங்களை வஞ்சித்த பசாசுக்களுக்காகவும் எத்தனம்பண்ணியிருக்கிற பாதாளக் குழியாகிய நரகத்துக்குப் போங்களென்பார். அப்போது கோடாகோடி கூட்டங்களான ராசாக்கள், பிரபுக்கள், ஐசுவரியவான்கள், கல்விமான்கள், மூடர்கள், ஏழைகளாகிய திரள்திரளான சனங்களைத் தேவதூதர்கள் பிடித்துச் சாய்த்து நரகத்திலே தள்ளுவார்கள்; அப்பொழுது அவர்கள் கடல் முழங்குகிறதுபோல அழுது துக்கத்தோடு புலம்பி, அக்கினியுங் கெந்தகமும் எரிகிற பெரிய கடலாகிய பாதாளத்திலே விழுவார்கள்; அங்கே அவர்கள் கிறிஸ்தவர்கள் தங்களுக்குப் போதித்துப் பிரயாசப்பட்டுப் புத்தி சொன்னதையும், சன்

மார்க்க புத்தகங்கள் கொடுக்கப்பட்டதையும், அங்கங்கே கோவில்களும் பங்களாக்களும் கட்டி குருமார்கள் ஆராதனை நடத்தினதையும், உபதேசிமார்கள் உபாத்திமார்கள் போதித்ததையும், மணிகள் நகராக்கள் அடிக்கப்பட்டதையும், மற்றுங் கிறிஸ்தவர்கள் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து நினைத்துப் புலம்பி புலம்பி அழுவார்கள். தங்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் திட்டிக் கிறிஸ்துமார்க்கத்துக்குப் போகவொட்டாமல் தடை செய்ததையும் சொல்லி அலறுவார்கள். அவர்களை அவியாத அக்கினி எரிக்கிறதினாலும், சாகாத பூச்சிகள் கடித்து அரிக்கிறதினாலும், அவர்கள் மனச்சாட்சி வாதிக்கிறதினாலும் வேதனை நாளுக்கு நாள் அகோரமாகிறதினால் தாங்கக்கூடாதபடிக்குச் சாவை விரும்பி, முகத்தில் அறைந்து மார்பில் அடித்து நாக்கைப் பிடுங்கி முட்டி மோதிச் சாகப் பிரயாசப்பட்டாலும் கூடாததினாலே கொடிய வேதனை அவர்களை வாதிக்கும். இந்த உலகத்தில் நியாயாதிபதிகள் குற்றவாளிகளை ஒரு வருஷம் இரண்டு வருஷம் பதினாறு வருஷம் உயிருள்ளவரையும் தீர்ப்புப் பண்ணுகிறார்கள்; அவர்கள் குறிக்கப்ப

ட்ட காலத்திலே விடுதலை அடைகிறார்கள்; ஆனால் நரகத்தில் தள்ளப்படுகிறவர்களுக்குக் காலங் குறிக்கப்படவில்லை. ஆயிரம் வருஷமுமில்லை, பதினாயிரம் வருஷமுமில்லை, கோடி வருஷமுமில்லை, கோடாகோடி வருஷமுமில்லை. என்றென்றைக்குமென்றே இயேசுதேவன் தீர்ப்புச் செய்திருக்கிறார். இந்தப் பூமியின் நாலுக்கடைசியிலிருந்தும் சுவர் வளர்த்து, சூரியன் வரைக்கும் மேற்படி சுவரைக் கட்டி, அதில் இந்த உலகத்திலுள்ள நாடுகள் மலைகளிலுள்ள சகல மரங்களையும் வெட்டி அதிலே போட்டு, தீயைக்கொளுத்தி அதில் பாவிகளைத் தள்ளினால் அதின் வேதனை கொடிதென்று சொல்லத் தக்கதே; அதனிலும் நரகம் விஸ்தாரமாயும், கொடிய தீயாயும், கொடிய பூச்சிகள் நிறைந்ததாயும் இருக்குமே. தேவதூதர்கள் ஒரு மனிதனைப் பிடித்து இழுத்து நரகத்திலே தள்ளக் கொண்டுபோகிறபோது அவன் மனம் எப்படியிருக்கும்? அவனுடைய புலம்பலும் அழுகையும் எப்படிப்பட்டதாயிருக்கும், அவன் பரிதாபமாய் விழித்து, பரிதாபமாய்ப் புலம்பி அலறுவானே. நரகத்தில் ஒருவன் படும் வேதனைக்கு இந்த உலகத்தில் எல்லா மனிதர்களும் உலக

முண்டான நாள்முதல் பட்ட வேதனைகள் அத ற்கு ஈடல்ல. ஒருவன் நரகத்தில் வேதனைப்ப டுகிறதைப்பற்றி இவ்வுலகத்திலுள்ள எல்லா மனிதருங்கூடி கோடிகோடி காலம் அழுதாலும் ஆற்றுமை தீராது. நரகத்திலுள்ளவர்கள் ஈரல் குலை கருகி, தாகத்தால் நாவறண்டு, ஒருதுளி தண்ணீர் ஒரு துளி தண்ணீர் என்று கோடிநாள் கூப்பிட்டாலுங் கிடையாது. ஒரு சந்தை இரை ச்சல், ஒரு திருவிழாச் சனங்கள் இரைச்சல் எவ்வளவாயிருக்கிறது? நரகத்திலே எத்தனை கோடி சனங்களோ அழுது புலம்புவதால் கடல் முழக்கத்திலும், பெருங்காற்றின் முழக்கத்திலும் அதிகமாய் முழங்கும். அங்கே அவர்கள் வே தனை கொடிதானதினுலே பிள்ளையைத் தேடு வாருமில்லை, புருஷனைத் தேடுவாருமில்லை, பெ ண்சாதியைத் தேடுவாருமில்லை, பணத்தை நினை ப்பாருமில்லை, நிலத்தை நினைப்பாருமில்லை, கல்வியை விரும்புவாருமில்லை, ராசபட்டம் தே டுவாருமில்லை, வேதனையின்மேல் வேதனை பெ ருகுவதினுலே பற்கடிப்பும், பெருமூச்சும், அல றுதலும், துள்ளித்துள்ளிப் பாய்தலும் விழுதலு மாயிருக்கும். அங்கே பசாசுக்களும் கூகூவென் று அலறிப் பரிதபிக்கும். நரகத்தையும் அதின்

வேதனையையும் விபரித்து முடியாது. காரியம் இப்படியிருக்கிறதே. கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவனே! அவரை விசுவாசிக்கமாட்டோமென்று சொல்லும் சனங்களே! இந்தப் பெரிய காரியத்தை நீங்கள் லேசாய் எண்ணி மோசம்போகவேண்டாம். திருச்செந்தூர் உதவாது, பாவநாசம் உதவாது, ராமேசுரம் உதவாது, கங்காநதி உதவாது, விக்கிரகங்களெல்லாம் உதவாது, தண்ணீர்ப்பந்தல் உதவாது, அன்னதானம் உதவாது, ஆஸ்தி உதவாது, நகை உதவாது, நிலம் உதவாது, மாளிகை உதவாது, வீடு உதவாது, அதிகாரம் உதவாது, கல்வி உதவாது, ராமாயணம் உதவாது, பாரதம் உதவாது, பிரமா விஷ்ணு சிவன்துணை உதவாது, பிராமணர் துணை உதவாது, பேயும் உதவாது, பிடாரியும் உதவாது.

உங்களுக்காக சிவனைக் கொடுத்த இயேசுதேவனே உங்களுக்கு உதவுவார்; அவரை விசுவாசியுங்கள், அவரைத் தொழுதுகொள்ளுங்கள்.

ஐயோ, இந்த நாளுக்கு முந்தி மரித்த அவிசுவாசிகளெல்லாம் நரகத்தில் தள்ளப்படும்படி காவல்வைக்கப்பட்டிருக்கிறார்களே; நீசாகவில்லை, நீ சிவனோடிருக்கிறாய், கிறிஸ்தவர்கள்

போதனையைக் கேள், வேதத்தை வாசி, அதை வாசிக்கச்சொல்லிக் கேள், சன்மார்க்கப் புத்தகங்களை வாசி, கிறிஸ்தவர்கள் உன் நன்மையை விரும்புகிறார்கள், உன்னை இரட்சிக்கப் பிரயாசப்படுகிறார்கள், உனக்காக துக்கத்தோடு கவலைப்படுகிறார்கள், குருமாரை அசட்டை செய்யாதே, உபதேசிமாரை அசட்டை செய்யாதே, உபாத்திமாரை அசட்டை செய்யாதே; அவர்களெல்லாரும் இயேசுகிறிஸ்துவை உனக்கு அறிவிக்கிறவர்கள்.

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடு வரும்பொழுது நடக்கப்போகிற இன்னம் ஒரு பலத்த விசேஷமுண்டு. அதாவது, இந்த வானமும் பூமியும் அக்கினியினாலே அழிந்துபோவதே அந்த விசேஷம், விஸ்தாரமான இந்த வானமும் பூமியும் மனிதர்களுக்கு உபகாரமாக உண்டாக்கப்பட்டது; மனிதர்கள் பாவிகளாய்ப் போனதினாலே இந்த வானமும் பூமியும் அவர்களோடு முடியவேண்டியது. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோம், பூதலங்கள் எரிந்து கரைந்துபோம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் வெந்து

போம் என்று பரிசுத்த வேதவாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. அந்தப்படியே நடக்கும். இந்த விஸ்தாரமான பூமியும், அதிலுள்ள மலைகளும், நேர்த்தியான மரங்களும், விருட்சங்களும், பூந்தோட்டங்களும், கனிமரங்களும், கீதங்கள் பாடுகிற அநேக வகையான சிறந்த பல வர்ணமான பட்சிகளும், மனிதர்களுக்கு மிகவும் உபகாரமான கறவைப்பசுக்களும், உழவு காளைகளும், வண்டி எருதுகளும், சவ்வாரி பண்ணுகிற நேர்த்தியான குதிரைகளும், ஒட்டகங்களும், காட்டுமிருகங்களாகிய சிங்கம் காடி புலி ஆனைகளும், பொன் வெள்ளி தங்கம் முத்துகளும், நேர்த்தியும் உயரமுமான மாளிகைகளும், கோபுரங்களும், கோட்டைகளும், வீடுகளும், பட்டாடைகளும், தவசங்களும், குதிர்களும், நகைகளும், பெட்டிகளும், மேசைகளும், நாற்காலிகளும், பட்டு பட்டாடைகளும், வஸ்திரங்களும், ஆறுகளும், குளங்களும், சமுத்திரங்களும், மச்சங்களும், கப்பல்களும், செபாலயங்களும், சிவாலயங்கள் முதலான விக்கிரகக் கோவில்களும் அக்கினியால் எரிகிறதுமல்லாமல், மண்ணும் கல்லுமான சகலமும் வெந்து புகையாய்ப்போமே; இது எவ்வளவு துக்கமான

காரியம். ஒரு ஊர்மாத்திரம் அக்கினியால் வெந்துபோனால் நாம் எவ்வளவு துக்கப்படுகிறோம். இந்த முழு உலகமும் வேகும்போது எத்தனை பரிதாபமான காரியம். இது எப்படி நடக்குமென்று நினைக்கிறாய்; சொல்லுகிறேன், பூமிக்குள்ள ஆழத்திலே எப்பொருளையும் தகனித்துப்போடுகிற அக்கினி இருக்கிறதென்று பூமிசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதோடு சகல மரங்களிலும் தயிலமுண்டு; வேப்பமரத்தின் எண்ணெய், புங்கமரத்தின் எண்ணெய், புன்னைமரத்தின் எண்ணெய், கருக்கெண்ணெய், குருக்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், எள்ளெண்ணெய் முதலான எண்ணெய்களும், ஆட்டுக்கொழுப்பு, மாட்டுக்கொழுப்பு, மனிதர் கொழுப்பு முதலான சகல எண்ணெய்களும் பூமியிலிருந்துதானே வருகிறது. தலைக்குத் தேய்க்கிற எண்ணெய்களும், தீபம் வைக்கிற எண்ணெய்களும் நாளொன்றுக்கு ஒரு ஊருக்கு எவ்வளவு செலவாகும்? ஒரு நாட்டுக்கு எவ்வளவு செலவாகும்? ஒரு தேசத்துக்கு எவ்வளவு செலவாகும்? முழு உலகத்துக்கும் எவ்வளவு எண்ணெய்? இத்தனைகோட்டை என்று சொல்லக்கூடுமா? இவ்வளவு எண்ணெய்களும் பூமியிலி

ருக்கிறதே, இந்த எண்ணெய்களும் பூமியிலிருக்கிற அக்கினியும், இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவோடு வருகிற சுவாலையாய் எரியும் அக்கினியும், அவருடைய வல்லமையுள்ள வசனத்தால் ஒன்றாய்க்கூடி எரிந்து தகனித்துப்போடும்.

இந்த அக்கினியின் அகோரம் எவ்வளவாயிருக்கும் என்பதை நினைத்துப்பார். இந்த அகோரமான அக்கினி கிறிஸ்தவர்களுக்குப் புஷ்பமாரியைப்போலிருக்கும்; தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நித்தியமான அழிவாகிய அக்கினியாகவே இருக்கும். அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்தினின்றும், அவருடைய வல்லமையின் மகிமையினின்றும் நீங்கி, நித்தியமான அழிவாகிய தண்டனையை அடைவார்கள். இப்படிக் காரியம் முடிந்து வானமும் பூமியுமில்லாமல் போனபின்பு, புதிய வானத்தையும் புதிய பூமியையும் உண்டாக்குவார். அதிலே நீதி வாசம்பண்ணும். காரியம் இப்படியிருக்க, தேவனை அறியாதவர்களே! விக்கிரக ஆராதனையைத் துணிந்துசெய்து பாவத்தை அதிகப்படுத்துகிறவர்களே! இயேசுகிறிஸ்துவை வி

சுவாசிக்க மனமில்லாத அவிசுவாசிகளே! நீங்கள் எப்படித் தப்பிப்போவீர்கள்? கிறிஸ்தவர்களாகிய நாங்கள் உங்களுக்கு காலாகாலத்திலே இயேசுகிறிஸ்துவை அறிவிக்கிறோமே, போதிக்கிறோமே, உங்களையும் இரட்சிக்கவேணுமென்று விரும்புகிறோமே, உங்களுக்கு நன்மைசெய்ய ஆசைப்படுகிறோமே, உங்கள் திரளான கூட்டங்களை நாங்கள் அடிக்கடி பார்த்துப் பரிதாபப்படுகிறோமே, உங்களுக்காகச் செபம்பண்ணுகிறோமே, இயேசுகிறிஸ்து உங்களை இரட்சிக்கக் கிருபையின் காலத்தைக் கொடுத்திருக்கிறாரே.

ஆகையால் நீங்கள் தாமதிப்பது நியாயமல்ல; தேவன் உங்களுக்காகப் பாடுபட்டதை அசட்டை செய்யலாமா? அது மகா பெரிய பாவம். இந்தப் பொல்லாப்பை விட்டு மனந்திரும்புங்கள்; நியாயத்தீர்ப்புநாள் வருமுன்னும், உங்களை மரணம் வந்து வாரிக்கொண்டு போகுமுன்னும், நீங்கள் உங்கள் பொல்லாங்குகளை விட்டு மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து நித்திய சீவனுக்கு ஆயத்தப்படுங்கள். அவர் மகா ஆரவாரமாய் வரும்நாளில் நீங்கள் திடுக்கிடாதபடி அப்படிச் செய்யுங்கள்.